போகிறோமா? முன்னாள் நகராட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் என்று அனுபவம் உள்ளவர்களைப்போட்டு இருந்தால் பரவாயில்லை. கட்சிக்காரர்களைத் திருப்திப்படுத்த இப்படி போட்டு இருக்கிறார்கள். ஆகவே, நகராட்சிகளுக்கு விரைவில் தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சட்டமன்றம் முடிந்து நாம் போகும்போது காலம் சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவையும், பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவையும் கொண்டாட இருக்கிறோம். காலம் எல்லாம் எந்தக் கொள்கையை தந்தை பெரியார் அவர்கள் பட்டி தொட்டிகளில் எல்லாம் பரப்பினார்களோ அந்த சுயமரியாதைக் கொள்கையை, சம தர்மக் கொள்கையை நாம் பின்பற்றி வருகிறோம் என்று சொல்கிறபோது, அந்தக் கொள்கைக்கு மாறாக இந்த நாட்டிலே என்ன நடக்கிறது என்றால் எங்கே பார்த்தாலும் ஜாதி சண்டைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. பெரியார் அவர்களின் (மணியடிக்கப்பட்டது) 100-ஆண்டு விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில் அதைத் தடுக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கலவரங்களுக்குக் காரணம் யார் என்பதைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு தண்டனை அளிக்கும் வகையில் விசாரணை நடத்தப்பட வேண்டும், பெரியாரின் வழியிலே வந்தோம் என்று சொல்லிவிட்டு அவர்களுடைய கொள்கைக்கு முரண்பாடாக நடப்பது, பெரியாரின் கொள்கையை மதிப்பதாக ஆகாது என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 7-9-1978 அன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

83. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, புயல்-வெள்ளத்தால் பாதிக்கப் பெற்ற பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) விதிகளைச் செய்வது குறித்த, வருவாய்த் துறையின் 31-5-1978 ஆம் தேதியிடப்பெற்ற, 1297 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு, 1978-ஆம்

ஆண்டு, புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணச்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 17/1978) 9 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள் எதுவு மில்லை.